சிற்பனை முருகன் ஆலயத் திருப்பணிச்சபை
அங்குரார்ப்பணக் கூட்டஅறிக்கை

இடம்: 01, கலன்கடுவ பிளேஸ், கொழும்பு - 06
காலம்: 06. 11. 2025, மலை 4:30

பங்குபற்றியோர்

ஆசீர்வாதம் வழங்குநர்களாக

1. சிவஸ்ரீ. ந. உமேந்திரக் குருக்கள்
2. சிவஸ்ரீ. உ. கவிதாஸ் குருக்கள்

உறுப்பினர்கள்

1. திரு. விஸ்வநாதன் யோகநாதன் - தலைவர்
2. திரு. பொன்னம்பலம் ஈசன் – உப தலைவர்
3. திரு. தியாகராஜா பாலச்சந்திரன் - உப செயலாளர்
4. திரு. குமாரசாமி கங்கைவேணியன் - பொருளாளர்
5. திரு. தவச்செல்வம் சிற்பரன் – செயலாளர்

பார்வையாளர்களாக

1. திரு. சிவசாமி தயாபரன்
2. திரு. துரைராஜா அருந்தவநாதன்
3. திரு. இராஜலிங்கம் விக்னேஸ்வரலிங்கம்
4. திருமதி. ஜெயகுமாரி யோகநாதன்
5. திருமதி. வாசுகி கங்கைவேணியன்

இன்றைய கூட்டத்தை முருகப்பெருமானே தலைமைதாங்கி எமை வழிநடாத்தவேண்டும் என திரு. சிற்பரன் அவர்கள் வேண்டியதற்கு இணங்க மானசீகமாக எம்பெருமானது தலைமையின் கீழ், திருப்பணிச்சபைக்கான உறுப்பினர்களது பெயர் முன்மொழிவுகள் ஆலய பரிபாலனசபையினரின் உறுதிப்படுத்தலின்பின் திரு. சிவசாமி தயாபரன் அவர்களது தேவார பராயணத்துடனும், சிவஸ்ரீ. ந. உமேந்திரக் குருக்கள் அவர்களது ஆசீர்வாதத்துடனும் ஆரம்பமானது.

விடயங்களும் தீர்மானங்களும்

திருப்பணி வேலைகள் துரிதமாகவும் வினைத்திறனுடனும் நடாத்துவதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டு கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக எட்டப்பட்டன.

- ஆலய குடமுழுக்கு வைபவம் எதிர்வரும் 2027ம் வருடத்திற்குள் நடாத்தப்படவேண்டும் என்ற திரு. யோகநாதன் அவர்களது முன்மொழிவு சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட்து

- மேற்படி தீர்மானத்திற்கு அமைய துரிதகதியில் வேலைத்திட்ட்ங்களை நகர்த்துவதற்கு எதுவாக, கோபுர கட்டுமானத்திற்கு சமகாலத்தில் ஏனைய கட்டுமான மற்றும் அபிவிருத்தி வேலைகளும் பொருத்தமான முறையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்

- ஆலயத்தின் தற்போதைய மற்றும் உத்தேச கட்டுமானங்கள் அனைத்தும் ஆகமவிதிமுறைகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிசெய்யும்பொருட்டு பொருத்தமான நிபுணத்துவ ஆலோசனைகளை சிவஸ்ரீ கவிதாஸ் குருக்கள் அவர்களது வழிகாட்டலுடன் பெறப்படவேண்டும்

- பெறப்பட்ட நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு அமைய வேலைத்திட்ட்ங்கள் உறுதிப்படுத்தப்பட்டு விலைகோரல்களின் அடிப்படையில் முழுமையான உத்தேச செலவு அறிக்கை (Estimate) தயாரிக்கப்படுத்தல் வேண்டும்

- கோபுரத்தின் வியாழவரி மட்டுமான வேலைத்திட்ட்ங்களை கூடிய விரைவில் நிறைவுசெய்தபின் மீதமுள்ள அணைத்து திருப்பணி வேலைகளையும் திருப்பணி சபை செயற்படுத்தும்

- வியாழவரி மட்டுமான வேலைத்திட்ட்ங்களின் முழுமையான செலவறிக்கை எதிர்வரும் மார்கழிமாத (December 2025) இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படும் என பொருளாளர் அறிவித்தார். மேலும் மேற்படி அறிக்கையுடன் இதுகாலவரைக்குமான திருப்பணி நன்கொடையாளர்களது முழுமையான பட்டியலும், நன்கொடைக்கு உறுதிமொழியளித்தவர்களது பட்டியலும் சமர்ப்பிக்கப்படும் என தீரமாணிக்கப்பட்ட்து

- சபையின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படைத்தன்மையுடனும் வினைத்திறனாகவும் நடாத்த எதுவாக திருப்பணி சபையின் பெயரில் பிரத்தியேகமான ஒரு நடைமுறை வாங்கிக் கணக்கு வேலணை கோமேர்சியல் வங்கியில் (Commercial Bank) ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த

வங்கிக்கணக்கு திருப்பணிச்சபையின் செயலாளர் மற்றும் பொருளாளர் இருவரதும் இணைந்த ஒப்பமிடலுடன் செயற்படுத்தப்படும். செலவீனங்கள் அனைத்தும் காசோலை மூலமாகவோ அல்லது இணையவழி (online transfer) மூலமாகவோ மட்டுமே செயற்படுத்தப்படும்

- திருப்பணி வேலைத்திட்ட செலவீனங்களின் மேற்பார்வை மற்றும் பராமரித்தல் தொடர்பாக ஒரு நிரந்தர கணக்காளர் நியமிக்கப்பட வேண்டும்

- இலங்கையில் திருப்பணிக்கான நன்கொடைகளை சேகரிக்கும் பொறுப்பு சபையின் அணைத்து உறுப்பினர்களாலும் வழிநடத்தப்படலாம். நன்கொடையாளர்களுக்கு திருப்பணிச்சபையின் கணக்கு இலக்கம் கொடுக்கப்பட்டு நேரடியாக குறித்த வாங்கிக் கணக்கின் மூலமாக மாத்திரமே நன்கொடைகள் பெறப்படவேண்டும்

- வெளிநாடுகளில் நன்கொடைகளை பெற்றுக்கொள்ளும் பொறுப்பு தலைவர் திரு யோகநாதன் அவர்களிடமே விடப்படும் எனவும் மேற்படி பெறப்படும் நன்கொடைகள் அனைத்தும் உரியமுறையில் அவர்முலம் திருப்பணி சபையின் வாங்கி கணக்கிற்கு வைப்பிலிடப்பட்டு நன்கொடையாளர்களது பட்டியலும் வெளிப்படுத்தப்படும்

- நன்கொடையாளர்களுக்கான பற்று சீட்டுக்களை வழங்கும் பொருட்டு திருப்பணி சபையின் பெயரில் புதிய பற்றுச்சீட்டுப் புத்தகம் அச்சிடப்படல் வேண்டும்

- திருப்பணி வேலைகளது முன்னேற்றம் மற்றும் வரவு செலவு விபரங்களை உடனுக்குடன் வெளிப்படுத்தும் பொருட்டு நன்கொடையாளர்களையும் ஆலய நலன்விரும்பிகளையும் இணைத்து திருப்பணிச்சபை செயலாளரால் ஒரு WhatsApp குழுமம் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படும்

- திருப்பணிச்சபையின் கூட்டங்கள் நேரிலோ அல்லது இணையவழி மூலமாகவோ நடாத்தப்படலாம்

- புதிய கோபுரத்துடன் பொருந்தும் வகையில் மணிக்கூட்டு கோபுரமும், மணியும் நிறுவப்படவேண்டும் என்ற திரு. கங்கைவேணியன் அவர்களது வேண்டுகோளும், அமையப்பெறும் கோபுரத்தின் நிறமானது திருச்செந்தூர் ஆலயத்தின் கோபுர நிறத்தை ஒத்த திருநீற்று நிறத்தில் அமைத்தல் வேண்டும் என்ற திரு. யோகநாதன் அவர்களது வேண்டுகோளும் மற்றும் ஆறுமுகப்பெருமானின் தெற்குப்புற வாசலை பொருத்தமானமுறையில்


பெரிதாக்க வேண்டும் என்ற திரு. பாலச்சந்திரன் அவர்களது வேண்டுகோளும் சாதகமான முறையில் பரிசீலிக்கத் தீர்மானிக்கப்பட்ட்து

- குடமுழுக்கு விழா நிறைவடைந்த மறுதினமே இந்திருப்பணிச்சபையின் செயட்பாடுகள் நிறைவுறுவதுடன் காலதாமதமின்றி திருப்பணிச்சபையின் கணக்கறிக்கைகள் வெளியிடப்பட்டதும் உத்தியோகபூர்வமாக சபை கலைக்கப்பட்டு பொறுப்புகள் அனைத்தும் ஆலய பரிபாலனசபையினரிடம் ஒப்படைக்கப்படும்

திரு. பாலச்சந்திரன் அவர்களது நன்றி தெரிவிப்புடன் இக்கூட்டம் மலை 5:45 மணியளவில் மகிழ்வுடனும் நிறைவுடனும் நிறைவு பெற்றது.

அறிக்கை தயாரிப்பு :-
தவச்செல்வம் சிற்பரன்
செயலாளர்
திகதி : 23. 11. 2025

திருச்செந்தூர் ஆலய இராஜ கோபுரத்தின் தோற்றம்



திருப்பணிச்சபை கூட்ட புகைப்படங்கள்





